
# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | ஐ. அவ். 4 | சித்திரை 12 (24-4-77) ஞாயிறு | புத்தகம்30 இதழ் 105


## பேராசிரியர் ராமமூர்த்தி



உலகப் பிரசித்தி பெற்ற மூளை நரம்பு சிகிச்சை நிபுணரும், சென்னை நரம்பியல் சிகிச்சை நிலையத்தின் பேராசிரியருமான டாக்டர் ராமமூர்த்தி அவர்கள், தந்தை செல்வாவுக்கு சிகிச்சை அளிப்பதற்காக திருச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்திறங்கிய போது எடுத்த படம் (உள்ளே அவரது செவ்வியைக் காணலாம்)

# தி. மு. கழகப் பிளவுக்கு பின்னணி என்ன?

திராவிட முன்னேற்றக்கழகத்தில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு பின்னணியாக இருக்கும் அந்தரங்கக் காரணம் என்ன என்பதை நமது சென்னை நிருபர் துருவி ஆராய்ந்து நமக்கு எழுதியுள்ளார். அண்மையில் நடைபெற்ற இந்தியப் பாராளுமன்றத்தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் தோல்வியடைந்ததும், எம். ஜி. ஆரின் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் பெருவெற்றியீட்டியதும் தெரிந்ததே. இதையடுத்து, எதிர்வரும் சட்டமன்றத்தேர்தலுக்கு முன்னர் எம். ஜி. ஆருடன் சமரசம் செய்து கொள்ள தி.மு. கழகத்தைச்சேர்ந்த சில தலைவர்கள் கழகத்தலைவர் கலைஞர் கருணாநிதியிடம் ஆலோசனை கூறியிருந்தனர். இந்த ஆலோசனையை கலைஞர் கருணாநிதி ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இதனைத்தொடர்ந்தே நாவலர் நெடுஞ்செழியன் உட்பட கழகத்தின் உயர் மட்டத்தலைவர்கள் சிலர் கழகத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.



கலைஞர் கருணாநிதியின் தலைமையை ஏற்க மறுத்துத்தான் தாங்கள் திராவிட முன்னேற்றக்கழகத்திலிருந்து வெளியேறியதாக கூறப்படுவதை திரு. கே. இராசாராம் மறுத்துள்ளார்.

15—4—77 வெள்ளிக்கிழமை திராவிடமுன்னேற்றக்கழகத்திலிருந்து அதன் பொதுச் செயலாளராக இருந்த நாவலர் இரா. நெடுஞ்செழியன், அவரது தம்பி இரா. செழியன், கே. இராசராம், எஸ். மாதவன், பா. உ. சண்முகம், முன்னாள் நாம் தமிழர் இயக்கத்தலைவர்—சி. பா. ஆதித்தன் ஆகியோர் வெளியேறினர்.

இதற்கு முன்னர் டி. கே. சீனிவாசன் தி. மு. க. விலிருந்து வெளியேறி அ. இ. அ. தி. மு. க. வில் தாம் சேர்ந்துவிட்டதாக அறிவித்திருந்தார்.

மேற்கண்ட ஏழுபேருடன் இராம. அரங்கண்ணல், முன்னாள் லோகசபை உறுப்பினரான திரு. எம். எஸ். சிவசாமி ஆகியோர் வெளியேறியுள்ளனர்.

வெளியேறியவர்களில் முன்னாள் அமைச்சர் பா. உ. சண்முகம் மட்டும் கலைஞர் கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்று தமது ராஜினாமாவை இதுவரை வாபஸ் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

ஏனையோர் 23—4—77 சனிக்கிழமை சென்னையில் ஓர் பொதுவான இடத்தில் கூடிப்பேசி தமது அடுத்த நடவடிக்கைபற்றி அறிவிக்கவிருக்கிறார்கள்.

இதற்கிடையில் சென்னையில் அவசரமாகக் கூடிய



திராவிட முன்னேற்றக்கழக மாவட்ட செயலாளர்களின் கூட்டத்தில் கழகத்திலிருந்து விலகியோரை மீண்டும் வந்து கழகத்தில் சேருமாறும் பிரச்சினைகள் எதையும் பேசித் தீர்க்கலாமென்றும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாவலர் நெடுஞ்செழியனின் அறிக்கையென்று கூறி

### சுதந்திரன் சென்னை நிருபர் தகவல்!

கே. இராசாராம் ஓர் அறிக்கையை விடுத்துள்ளார். நெடுஞ்செழியன் ராஜினாமா செய்த பின்னர், எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை.

### நெடுஞ்செழியன் அறிக்கை

நெடுஞ்செழியன் பெயரில் ராஜாராம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

'நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து,

—5-ம் பக்கம் பார்க்க

## புத்தளத்தில் த. வி. கூட்டணி வெற்றி பெறுமாம்! கல்வியமைச்சர் பதியுதீன் ஆரூடம்!

அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த கல்வியமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தனது ஆதரவாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாகத் தெரியவருகிறது.

அதில் பல்வேறு அரசியல் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்ட பொழுது, ஒரு கட்டத்தில் கல்வி அமைச்சர் "புத்தளத்தில் த. வி. கூட்டணி வேட்பாளர் நிச்சயம் வெற்றி பெறுவார்" எனக் கூறினாராம்.

# ஏழாவது ஆண்டும் அமுல்படுத்திவிட்டு 'தரப்படுத்தலை' அகற்றுகிறது அரசு

## கூட்டணி - பிரதமர் பேச்சுவார்த்தையின் பெறுபேறு!

கடந்த ஏழு ஆண்டுகளாக தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை பாழடித்து வந்த மொழிவாரித்தரப் படுத்தலை முற்றாக கைவிடுவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. 1977ம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் அடிப்படையில் ஏற்கெனவே நடைபெற்று முடிந்துவிட்டது. அரசாங்க அறிவித்தலின்படி அடுத்த ஆண்டுக்கான (1978) பல்கலைக்கழக அனுமதியே தரப்படுத்தலின்றி நடைமுறைப்படுத்தப்படும்.

மொழிவாரித் தரப்படுத்தல் முறை இன்றைய அரசாங்கத்தினால் 1970 ம் ஆண்டு முதல் 1977வரை நடைமுறைப்படுத்தப் பட்டு வந்தது தெரிந்ததே. இந்த மொழிவாரித்தரப்படுத்தலின் கீழ் தகுதியும் திறமையும் வாய்ந்த பல ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் கடந்த ஏழு ஆண்டுகளாக உயர்கல்வி மறுக்கப்பட்டு, விரக்தியுடன் வெளி நாடுகளுக்கு சென்றுள்ளனர். தரப்படுத்தலை எதிர்த்து 1970ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ் மாணவர் பேரவை யாழப்பாணத்தில் ஓர் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியது. இதைத்தொடர்ந்து தரப்படுத்தலையும் தமிழர்களுக்கு எதிரான இதரபாரபட்சங்களையும் எதிர்த்த தமிழ் இளைஞர்கள் நான்கு ஆண்டுகள் சிறைக்குள் தள்ளப்பட்டனர்.

தரப்படுத்தல் நியாயமானதுதான் என்றும் பின்தங்கிய சிங்கள மாணவர்களுக்கு உதவிசெய்வதற்கு தரப்படுத்தலே சரியான வழியென்றும் அரசாங்கம் கூறிவந்தது. பீட்டர் கெனமன் அரசாங்கத்தில் அங்கம் வகித்தபோது உயர்கல்விப் பிரச்சினைகள் பற்றி ஆராய அரசு கெனமனைக்கொண்ட ஒரு தனிநபர் குழுவை நியமித்தது. அந்தக் குழுவும், மொழிவாரித் தரப்படுத்தலை நீக்கும்படி அரசுக்கு ஆலோசனை கூறியது. அந்த ஆலோசனையையும் சிங்கள மாணவர்களின் எதிர்ப்புக்கு

—5-ம் பக்கம் பார்க்க

## மே தினத்தில் தனிநாடு தீர்மானம்

தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் இளைஞர் பேரவையும் தமிழ் தொழிற்சங்கங்களும் இணைந்து மே முதல் நாள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நடத்தும் மே தினக் கூட்டங்களில் பூரண சுயநிர்ணய உரிமையும், இறைமையும் கொண்ட சுதந்திரத் தமிழ் ஈழத்தை அமைக்கும் போராட்டத்தின் கீழ் திரளும்படி தமிழ் மக்களுக்கு அறைகூவல் விடுக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று கூட்டணி வட்டாரங்கள் உறுதியுடன் தெரிவித்தன.

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கருணாநிதியின்

# காலமறிந்த உதவி!

ஈழத் தமிழினத்தையும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களையும் துடிப்பிலாழ்த்திக் கொண்டு கடந்த ஒரு திங்களாக கண்களை மூடியபடி அறிவு திரும்பாத நிலையில் யாழ் மருத்துவமனையில் படுத்திருக்கிறார். தமிழ் ஈழத்தந்தை மூதறிஞர்செல்வா அவர்கள்!

அவருக்கு இலங்கையின் தலை சிறந்த மூளை நரம்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் கப்ரால் அவர்களும், மற்றும் டாக்டர்கள் சுப்பிரமணியம், சிவஞானவேல், மண்டலேஸ்வரன், நற்குணம் ஆகியோரும் கண்ணும் கருத்துமாக சிகிச்சை அளித்துவருகின்றனர்!

யாழ் மருத்துவமனை தாதிமார்களும், ஏனைய உத்தியோகத்தர்களும் ஒய்வு ஒழிச்சலோ, அலுப்பு சலிப்போ இன்றி ஓடியாடி தந்தைக்கு உதவிக்கொண்டிருக்கின்றனர்!

இருந்தபோதிலும், யாராவது வெளிநாட்டு மூளை நரம்பு சிகிச்சை நிபுணர் ஒருவரை வரவழைத்துத்தந்தை செல்வாவைக் காட்டினால் என்ன என்று உள்ளூர அனைவர் மனதிலும் ஓர் ஆசை ஏற்பட்டது.

டாக்டர் கப்ராலும் ஏனைய டாக்டர்களும் தாமாகவே முன்வந்து வெளிநாட்டு நிபுணர் ஒருவரை வரவழைத்து அவரிடமிருந்தும் ஆலோசனையைபெறுவதில் ஆர்வம் காட்டினர்.

எப்படியோ மூதறிஞர் சுகம்பெற்று எழவேண்டும் என்பதே அனைவரது ஆவலும் விருப்பமும் அல்லவா.

இதைத்தொடர்ந்து உலகப் பிரசித்திபெற்ற மூளை நரம்பு சிகிச்சை நிபுணரும், சென்னையிலுள்ள மூளை நரம்பு சிகிச்சை நிலையத்தில் பேராசிரியராகப் பணிபுரிபவருமான டாக்டர் ராமமூர்த்தி அவர்களை இங்கு வரவழைத்து, தந்தை செல்வாவை காட்டுவது என்று முடிவாகியது!

இங்குள்ள இந்தியத் தூதர் குர்பான்சிங் அவர்களிடம் இதைத் தெரிவித்தபோது உடல்நலம் கெட்டிருந்த நிலையிலும் அவர் எழுந்து வந்து தந்தை செல்வநாயகத்தின் விடயத்தில் டாக்டரை இங்கு வரவழைப்பதற்கு இந்திய அரசும், இந்திய தூதரகமும் முழு ஒத்துழைப்பும் நல்கும் என்று பெருந்தன்மையோடு தெரிவித்தார்.

இலங்கையின் வெளிநாட்டமைச்சும், இவ்விஷயத்தில் நுழைவாணை, அந்நிய செலாவணி போன்ற பிரச்சினைகள் குறுக்கிடாமல் தான் பார்த்துக்கொள்வதாக உறுதியளித்தது!

இந்த ஏற்பாடுகள் எல்லாம் சரி; ஆனால் டாக்டர் ராமமூர்த்தியை எங்கே பிடிப்பது? சென்னையில் யாருடன் தொடர்பு கொள்வது? அவரை இங்கு வருவதற்கு யார் ஒப்புக்கொள்ள வைப்பது என்ற கேள்விகள் அடுத்து எழுந்தன.

சென்னையிலிருந்து டாக்டரை இங்கு அழைக்கும் பொறுப்பை தந்தை செல்வாவின் மகன் திரு. சந்திரகாசன் என்னிடம் ஒப்படைத்தார்.

டாக்டர் ராமமூர்த்தியை இங்கு வரவழைப்பதற்காக சென்னையில் யாருடன் தொடர்பு கொள்ளலாம் என்று நான் சிந்தித்தபோது, திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களே என் சிந்தனையில் தோன்றினார்!

ஏனெனில் — உலகில் தமிழன் எங்கு கலங்கினாலும் கலங்குகின்ற இதயம் கருணாநிதியின் இதயம்!

உலகில் தமிழன் எங்கு வாழ்ந்தாலும் — அவனுக்கு உதவத்துடிக்கின்ற உயர்ந்த நெஞ்சம் — கருணாநிதியின் நெஞ்சம்!

ஈழத்தமிழர்கள் மீதும் — தமிழ் ஈழத்தந்தை மூதறிஞர் செல்வா அவர்கள் மீதும் கொள்ளையன்பு கொண்டிருப்பவர் கருணாநிதி அவர்கள்; அத்துடன் எனக்கு நேரடியாக அறிமுகமானவரும் கூட!

எனவே கருணாநிதியின் இல்லத்துக்கு 14—4—77 வியாழக்கிழமை மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்!


அவர் அங்கு இல்லையென்றும் — மறுநாள் காலையே சென்னை திரும்புவதாகவும் தகவல் வந்தது!

15—4—77 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி வரை சென்னை—கொழும்பு தொலைபேசித் தொடர்புகள் 'அவிட் ஆப் ஆடர்!

அன்று மாலை 4மணிக்கு — எமது தொலைபேசி அடித்தது— எடுத்து 'ஹலோ' என்கிறேன்! மறுபுறத்தில் கரகரத்த குரலொன்று பேசியது!

ஆமாம்—கலைஞரே தான்!

நான் இன்னார் பேசுவதாக அறிமுகப்படுத்தி விட்டு—



மூதறிஞர் செல்வாவுடன் அமர்ந்துகொண்டு சுதந்திரன் படிக்கிறார் கலைஞர்.

மூதறிஞரின் உடல்நிலை பற்றியும், டாக்டர் ராமமூர்த்தியை இங்கு வர வழைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பற்றியும் கூறிவிட்டு—டாக்டரை உங்களுக்குத் தெரியுமா என்று நான் கேட்டு வைக்கிறேன்!

"ஆமாம்,எனக்குஅவரைத் தெரியும்—நான் அவருடன் பேசிவிட்டு, மீண்டும் உங்களோடு தொடர்புகொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டு 'போனை' வைக்கிறார் கலைஞர் —

மீண்டும் அன்றிரவு 8 மணி —

தொலைபேசி அடிக்கிறது— மறுபுறம் சென்னையிலிருந்து கலைஞர் பேசினார் தி.மு.க. தலைமை நிலையத்திலிருந்து—

"டாக்டரிடம் பேசி விட்டேன் — அவர் வருவதாக ஒப்புக்கொண்டு விட்டார். நீங்களும் ஒரு முறை அவருடன் பேசுங்கள்; பேசிவிட்டு மீண்டும் என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்!"

இவ்வாறு கூறிய கலைஞர்— டாக்டர் ராம மூர்த்தியின் தொலைபேசி இலக்கத்தையும் தந்தார்!

நான் டாக்டர் ராமமூர்த்தியுடன் தொடர்புகொண்டு பேசினேன். பாஸ்போர்ட், நுழைவாணை போன்ற எதுவும் இன்றி அவர் வரலா[illegible] ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தேன் வருவதற்கு அவர் இணங்கினார்!

இதன் பின்னர் மீண்டும் கலைஞருடன் நான்தொடர்பு கொண்ட போது இரவு மணி 11-45. அந்த நேரத்திலும் கலைஞர் கம்பீரமாகப் பேசினார்!

"இங்கு கருணாநிதி பேசுகிறேன் டாக்டர் ராமமூர்த்தியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் இங்கு நாம் செய்துவிட்டோம்; அதற்கான முழுச் செலவையும் "டி. எம். கே. பார்ட்டியே" ஏற்று, டாக்டரை அனுப்பிவைக்கிறது. ஈழத் தமிழர் தந்தை சுகமாக வேண்டுமென்பதே எமது ஒரே பிரார்த்தனை" என்றார் கலைஞர்.

—ஆகா, இதுவல்லவோ தமிழினப்பற்று, இதுவல்லவோ உலகத்தமிழின ஒருமைப்பாடு, இதுவல்லவோ தமிழின ஒற்றுமை, என்று நான் பெருமை கொண்டேன்.

'மெத்த நன்றி' என்றேன் 'நன்றியெல்லாம் வேண்டாம்; இது எமது கடமை. நாளைக்காலை (16-4-77) 9.00 மணிக்குள் உங்களுக்கு 'போன்' செய்து, எந்த விமானத்தில் எத்தனை மணிக்கு டாக்டர் புறப்படுகிறார் என்பதைக் கூறுகிறோம்' என்றார் கலைஞர்.

தி.மு.க. தலைமை நிலையத்தைச் சேர்ந்த 'கணபதி' என்ற அன்பரும் அடுத்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு இச்செய்தியை உறுதிப்படுத்தினார்.

16-4-77 காலையில் நான் டாக்டர் ராமமூர்த்தியுடன் மீண்டும் தொடர்புகொண்டேன். 'எல்லா ஒழுங்குகளையும் முடித்துக்கொண்டு, வீரசாமி அவர்களை என்னிடம் அனுப்புவதாகக் கலைஞர் கூறியிருக்கிறார்— அவரது வருகையை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்றார் டாக்டர்.

தொடர்ந்து அன்று மாலை வரை தொலைபேசி 'அவுட் ஆப் ஆடர்' என்றார்கள்; இங்கிருந்து நானோ அங்கிருந்து கலைஞரோ ஒருவருடன் ஒருவர் பேசமுடியவில்லை!

இரவு 8.00 மணிக்கு கலைஞர்பேசினார். 'டாக்டர்நாளை (17-4-77)காலை 9.30 மணிக்கு திருச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து இறங்குகிறார். அவரை விமான நிலையத்தில் சந்தியுங்கள்!' என்று தெரிவித்தார் கலைஞர்.

கலைஞருக்கு நன்றி தெரிவித்த நான்—தி.மு. கழகத்தில்நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அன்றையபத்திரிகைகளில் வெளிவந்த செய்தி பற்றி கவலையுடன் கேட்டேன்!

"ஆமாம், சில பிரச்சினைகள் உண்டு; ஆனால் அவற்றையெல்லாம் சமாளித்து கழகத்தை கட்டிக் காக்கும் ஆற்றலும் கழகத்தினருக்குஉண்டு" என்று எதுவித பதட்டமுமின்றி அமைதியாக கூறினார் கலைஞர்.

சென்னை தொலைபேசி நிலையத்தில் பணியாற்றும் தமிழகத்துப் பெண்களும், கலைஞருடன் நான் பேசி முடித்த பின்னர், "செல்வநாயகம் எப்படியிருக்கிறார்? இன்னும் அறிவு வரவில்லையா?" என்று மெத்த அக்கறையுடனும் ஆர்வத்துடனும் விசாரித்தனர்.

கொழும்பிலிருந்து சென்னைக்கு தொடர்புகொண்டு கலைஞருடனும், டாக்டர் ராமமூர்த்தியுடனும் பேசுவதற்கு வசதியாக தொலைபேசி அழைப்புக்களை தாமதமின்றி கிடைப்பதற்கு தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தினருடன் பேசி ஒழுங்கு செய்து, தந்த முன்னாள் உதவி அஞ்சல் ஆணையாளர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கும், 'செல்வாவின் விடயம்' என்றவுடன் ஆர்வமுடன் உதவிபுரிந்த பரிவர்த்தனை நிலைய உத்தியோகத்தர்களும் நன்றிக்குரியவர்கள்.

கழகத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலைக்கு மத்தியிலும் ஈழத்தமிழர்களின் மீதும், தந்தை செல்வா மீதும் வைத்திருக்கும் உண்மையான அன்பின் காரணமாக உடனடியாக அக்கறையுடன் நடவடிக்கை எடுத்து, டாக்டர் ராமமூர்த்தியை 24 மணி நேரத்துக்குள் ஈழத்துக்கு அனுப்பிவைத்த கலைஞர் கருணாநிதிக்கு தமிழ்மக்கள் என்றைக்கும் நன்றியுடையவர்கள்!

ஓங்குக உலகத் தமிழர் ஒற்றுமை!

மலர்க தமிழ் ஈழம்!!

—கோவை மகேசன்


1.5.77ல் மீண்டும் வெளிவருகிறது

'ஒரு தீப்பொறி'

ஆசிரியர்: ம. க. அ. அந்தனிசில்

மேதினி போற்றும் மேதினம் அன்று
கோரப் புயலாய் கொந்தளிக்கும் கடலாய்

குமுறும் எரிமலையாய்
மீண்டும் வெளிவருகிறது
எத்தர்களின் எதிரி பித்தர்களின் வைரி

'ஒரு தீப்பொறி'

பக்கங்கள் ஆறு பாருங்கள் தொட்டு
விலை சதம் 60 மட்டும்

மாதம் இருமுறையாக ஒவ்வொரு மாதமும்
1ந் தேதியும் 15ந் தேதியும் வெளிவரும்.

நாடெங்கும் கிடைக்கும்.



கிளிநொச்சியில்
சுவைமிகு உணவுகள்
உண்டுகளித்து
இன்புற
நாடுங்கள்

சிவாஸ் கபே
கண்டி வீதி,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே உடல் இலட்சியமே உயிர்!

**அன்பு நண்பா,**

தமிழ் ஈழத்து அரசியலில் இப்போது ஓர் 'வேடிக்கை' நடைபெற்று வருவதனை நீ கவனித்தனையோ இல்லையோ—நான் கவனித்து வருகிறேன். இப்பொழுது கொஞ்ச நாட்களாக புதிய புதிய "தமிழ் வீரர்கள்" புற்றீசல் போலப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; தனிநாட்டுக்காக உயிரையும் கொடுப்போம்; வியர்வை, கண்ணீர், இரத்தம் சிந்துவோம்; தமிழ் ஈழ விடுதலைக்காகவே நாங்கள் உயிரைப்பிடித்துக்கொண்டிருக்கிறோம்; என்றெல்லாம் நாளும் பொழுதும் புதிது புதிதாக புற்றீசல் போலப்புறப்பட்டுக்கொண்டிருக்கும் "தமிழ் வீரர்கள்" அறிக்கைவிட்டும், பிரசங்க மாரி பொழிந்தும் வருவதைக்கவனித்து வருகிறேன். இது "தேர்தல் சீசன் "அல்லவா? எனவே தேர்தலுக்குத் தேர்தல் இப்படி புதிய புதிய "தமிழ் வீரர்கள்" மீசையை முறுக்கிக் கொண்டு புற்றீசல் போலப்புறப்படுவதும், தேர்தல் டிக்கட் கிடைக்காவிட்டால் அல்லது தேர்தலில் தோல்வியை தழுவிக் கொண்டுவிட்டால். அரசியலிலிருந்தே "அம்போ" என்று ஓடி ஒதுங்கிவிடுவதையும் நாம் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கவனித்துக் கொண்டுதான் வருகிறோம்!

1972ம் ஆண்டிலிருந்து கூட்டணியுடன் வாருங்கள்; வந்துசேருங்கள்; ஒன்றுபட்டு நின்று நாட்டு விடுதலைக்காக உழைத்திடுவோம் வருவீர் என்று சுயாட்சிக்கழகத்தினரை அன்போடும் ஆசையோடும், ஆவலோடும் அழைத்துவருகிறோம்; ஆனால் அவர்களோ எம்மைத் தூற்றுவதையே தம் தொழிலாக்கிக்கொண்டு திரிந்தனர்; தலைவரோ இங்கிலாந்து சென்று 'ஓய்வு' எடுத்துக் கொண்டிருந்தார்; இங்கு நாமோ போர்க்களத்தில் சிங்கள ஏகாதிபத்தியப் புயலுக்கு மத்தியில்—நின்றோம்; நெருப்புக்கு மத்தியிலும் நெருக்கடிக்கு மத்தியிலும், நெஞ்சில் ஏற்றுக் கொண்டுவிட்ட இலட்சியத்துக்காக சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தோம்; இன விடுதலைத் தீயை அணைந்து போகவிடாமல் மக்களின் உள்ளங்களில் கொழுத்திக் கொண்டிருந்தோம்; நமது இயக்க இளைஞர்கள் நான்கு ஐந்து ஆண்டுகளாக சிங்களச் சிறைகளில் வாடிக் கொண்டிருந்தார்கள்!

ஆனால் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறவிருப்பது தெரிந்ததும்—நின்று போன சுயாட்சிக்கழகத்தினரின் பத்திரிகைக்கு உயிர் வந்தது! சுயாட்சிக்கழகத்தினரோ "தொகுதி" கேட்டுப் பேரம் பேசுவதற்கு கூட்டணியிடம் தூதுவருகிறார்கள்!

இலட்சிய அடிப்படையில்—இயக்க அடிப்படையில்—இன ஒற்றுமை அடிப்படையில்—கூட்டணியில் இணையும்படி நேசக்கரம் நீட்டினோம்—வருந்தி வருந்தி அழைத்தோம் — ஆனால் அவர்களோ தேர்தலுக்கு 'சீட்' பேரம் பேசி கூட்டணியில் சேருவதற்கு இப்போது தான் துடிதுடிக்கிறார்கள்! இலட்சிய அடிப்படையில்— இன ஒற்றுமை என்ற அடிப்படையிலன்றி "பாராளுமன்றக்கதிரை" அடிப்படையில் ஒற்றுமைக்கு உசாவுகிறார்கள்; எத்துணை சந்தர்ப்பவாதம் பார்த்தாயா?

இதே போல இன்னும் எத்தனையோ பேர் — எங்கெங்கோ இருந்தவர்கள் — தாமுண்டு தம் வயிறுண்டு என்று வாழ்ந்தவர்கள் — தமிழினத்தைப்பற்றியே சிந்திக்காதவர்கள்— கூட்டணி கடந்த காலங்களில நடத்திய இயக்கங்களிலிருந்தெல்லாம் ஒதுங்கியிருந்தவர்கள் — கூட்டணியை உருவாக்கி, அதை வளர்க்கும் பணியில் ஒரு துளியேனும் பங்கு பெறாதவர்கள் — தமிழ் சமுதாயத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களை புரிந்து கொள்ளாதவர்கள்—இன்றைக்கு பாராளுமன்றக்கதிரைக்காக "தமிழ் ஈழவிடுதலைவீரர்களாக" தம்மைக்காட்டிக் கொள்வதில் மும்முரமாக நிற்கிறார்கள்; பாராளுமன்றக்கதிரைக்காக தமிழின ஒற்றுமையை சிதைக்கவும் இந்த சுயநலப்போலிகள் பதவி வெறிபிடித்து அலைகிறார்கள்!

இத்தனைக்கு மத்தியிலும் ஒரேயொரு உண்மை என்னை மகிழ்ச்சியடைய வைக்கிறது. அதாவது தனிநாடு, தமிழ் ஈழம் என்ற அடிப்படை இலட்சியம் — சுதந்திரக் குறிக்கோள் தமிழ் மக்களின் உள்ளங்களில் எல்லாம் அங்கிங்கெனாதபடி எங்கும் ஆழமாகப் பதிந்து விட்டது; அதுவே தமிழ் சமுதாயத்தின் ஆதர்ஸ இலட்சியமாக—அடித்தளமாக—முடிவான தீர்மானமாக—இன்றைக்கு ஆழமாக வேரோடி வளர்ந்து விட்டது. இந்த அடிப்படை இலட்சியத்தை ஏற்காதவர்களுக்கு தமிழ் ஈழ மந்திரத்தை உதட்டளவிலாவது உச்சரிக்காதவர்களுக்கு—தமிழ் ஈழத்து அரசியலில் இனி இடமேயில்லை என்ற நிலை இன்றைக்கு உறுதியாக நிலை பெற்றுவிட்டது. கூட்டணியும் தமிழ் இளைஞர் பேரவையும், சுதந்திரனும் மக்களின் மத்தியில் மூட்டி விட்டிருக்கும் இந்த இலட்சியத்தீயை அணைக்க இனியாராலுமேமுடியாதென்பதுதான் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

அதே நேரத்தில் தமிழ் மக்கள் அரசியல் தெளிவு மிக்கவர்கள்; தமிழ்ஈழ இலட்சியத்துக்காக உண்மையான விசுவாசத்துடன் இதுவரை உழைத்துவந்தவர்கள் யார்? இது காலவரை ஒடி ஒதுங்கி ஒய்வு எடுத்துக் கொண்டு உல்லாச சல்லாப வாழ்க்கையை நடத்திவிட்டு தேர்தல் சமயத்தில் ஓடோடி வந்து பாராளுமன்றக் கதிரைக்காக "தமிழ் வீரர்களாக" தம்மைக் காட்டிக் கொள்ளும் போலிகள் யார் என்பது தமிழ் மக்களுக்கு நன்குதெரியும்; ஆகவே அவர்கள் ஒவ்வொருவரையும் இனங்கண்டு, அவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டிடத் தமிழ் சமுதாயம் தயங்கமாட்டாது!

இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் போகின்றவர்களுக்கு நிச்சயமாக அது ஒரு மலர்ப்படுக்கையாக இருக்கப் போவதில்லை; பதவி சுகத்தையும், பஞ்சணை மெத்தையையும், சலுகைகளையும் அனுபவித்




துக்கொண்டு அவர்கள் தூங்கிச் சுகம்பெற முடியாது; பாராளுமன்றப் பிரதிநிதியாக வர விருப்பவர்களுக்கு, பாராளுமன்றத்தை விட பாராளுமன்றத்துக்கு வெளியிலேதான் வேலை இருக்கப் போகிறது நிரம்ப; சிங்களப்பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் நமது தமிழ்ப் பிரதிநிதிகள், தமிழ் ஈழத்தின் அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி, தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பை உருவாக்க நேரிடலாம்; தமிழ் ஈழத்துக்கென தனியான பாராளுமன்றத்தை உருவாக்க நேரிடலாம்; அப்படிச் செய்யும் போது, 'தேசத்துரோகி' யென சிங்கள ஏகாதிபத்தியம் சிறைபிடித்து ஆயுள் தண்டனை வழங்கலாம்; நிரந்தரமாகவே சிறைக்குள்தள்ளலாம்—ஏன் தூக்குத்தண்டனை கூட விதிக்கலாம்; இந்தத் துன்பங்களையெல்லாம் சுமக்கத்தயாராக இருப்பவர்கள் யாரோ—நாட்டு விடுதலைப் போரில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்கத்தயாராக இருப்பவர்கள் யாரோ—அவர்கள் மட்டுமே கூட்டணியின் சார்பில் தேர்தலில் நிற்கவேண்டிய காலகட்டம் இது! இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டால், இன்றைக்கு கூட்டணியின் "டிக்கட்" கேட்பவர்கள் எத்தனையோ பேர் சொல்லாமல் கொள்ளாமலே ஓடி விடுவார்கள்!

கூட்டணியின் "டிக்கட்" பெற்று—தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்ற பின்னர்—பழையபடி பழைய பாணியில் "தூங்காமல் தூங்கி சுகம் பெறும்" சாய்மனைக்கதிரை அரசியலையே தொடர்ந்து நடத்தலாம் என்று யாராவது திட்டமிட்டிருப்பார்களானல், அதற்கு விடுதலை வீறு கொண்டெழுந்துள்ள தமிழ் சமுதாயம் இனியும் அனுமதிக்காது!

வாழவேண்டிய இளங்காளை — மாவீரன் சிவகுமாரன் பல பயங்கரப் போராட்டங்களை நடத்தி இறுதியில் தன் இன்னுயிர் தந்ததும்; நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் அடிகளையும் உதைகளையும், சொல்லொணாத் துன்பங்களையும், இம்சைகளையும் ஏளனங்களையும் தாங்கிக்கொண்டு நான்கு ஆண்டுகாலம் உற்றார் பெற்றோரையும் [illegible]ரையும் பிரிந்து சிங்கள நாட்டுச் சிறைச்சாலைகளிலே நரக வேதனைகளை தாங்கிக்கொண்டதும் — நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் நம்மிளைஞர்கள் பலர் கரந்துறைந்து மூட்டை தூக்கியும், சைக்கிள் ரிக்ஷா இழுத்தும் துன்பங்களை அனுபவித்ததும்—சிங்கள ஏகாதிபத்தியத்தின் வேட்டையிலிருந்து தப்புவதற்காக காடென்றும் மலையென்றும் பாராது பசியையும் பட்டினியையும் தாங்கிக்கொண்டு நம் இளைஞர்கள் புலிகள் போல நடமாடியதும் — இராசரத்தினம் சென்னையில் உயிர் இழந்ததும் — உயிரையே பணயம் வைத்து நம் இளைஞர்கள் இயங்கியதும் — கூட்டணியையும், அதன் தமிழ்ஈழ இலட்சியத்தையும் கட்டி வளர்ப்பதற்கே தவிர — பாராளுமன்றக்கதிரைக்காக அதைத்தட்டிக் கொட்டுவதற்காக அல்ல!

சென்னைத்துறைமுகத்தில் குண்டு வெடித்ததற்காக அங்கு நம் இளைஞர்கள் கைதானதும், லண்டனில் ஈழ விடுதலை முன்னணியினர் கிரிக்கட் பந்தாட்ட மைதானத்தையே ஒரு கலக்குகலக்கி, உலக அபிப்பிராயத்தை தமிழ் ஈழப் பிரச்சினையின் பக்கம் திருப்பிவிட்டதும், லண்டன் ஈழத் தமிழர் கழகம் வேகமுடனும் விறுவிறுப்புடனும் செயற்பட்டுவருவதும், தமிழ் ஈழ விடுதலையொன்றுக்காகவே தவிர— பாராளுமன்றக் கதிரைக்காக அல்ல!

இத்தனைபேரின் தியாகத்தின் மத்தியில்— கண்ணீரும் இரத்தமும் வியர்வையும் சிந்தி உருவாகியுள்ள இந்த விடுதலை இயக்கத்தை—பாராளுமன்றக் கதிரைகளையே குறிக்கோளுடையதாக மாற்றியமைக்க சிலர் முயற்சிப்பதும், பாராளுமன்றக் கதிரைகளுக்காகவே மீண்டும்அழிந்துபோன கட்சி அரசியல் சேற்றுக்குள் மூழ்குவதும், உண்மையிலே இயக்கத்தைக் கட்டிவளர்த்த உண்மைத் தொண்டனின் நெஞ்சில் ஏறிமிதிப்பது போன்ற செயலாகும்!

தமிழ் ஈழத்துக்கென தனியான ஒரு பாராளுமன்றத்தை அமைக்கப் புறப்பட்டுவிட்டு—சிங்கள நாட்டுப் பாராளுமன்றக் கதிரைகளைப் பிடிப்பதற்காக கூட்டணியை குலைத்திடவும், இறந்துபோன கட்சிகளுக்கு உயிரூட்டவும் யார் முயற்சித்தாலும் அவர்களை தமிழ்க்குலம் மன்னிக்கமாட்டாது!

**கூட்டணியொன்றே தமிழ் தேசிய இனத்தின் ஏகோபித்த தேசிய விடுதலை இயக்கம்; சுதந்திரத் தமிழ் ஈழநாட்டை நிறுவுவதே அதன் முடிவான இலட்சியம்; இந்த இலட்சியத்தை முன்வைத்து கூட்டணி ஒரே அமைப்பாகி, 'கூட்டணி' என்ற பெயரை இழந்து, "தமிழர் விடுதலை இயக்கமாக" உருவெடுக்க வேண்டுமென்று தமிழ் சமுதாயம் முழுவதும் இன்றைக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரேகொடி ஒரே தலைமை, ஒரே அமைப்பு என்ற நிலை தோன்றிவிட்டால் — தொடர்ந்தும் நாம் "கூட்டணி"யாக இருந்திடத் தேவை இல்லை! ஒரே அமைப்பாகஇயங்கிட முடியும். அந்த நன்னாள் விரைவில் வரவேண்டுமென்பதே தமிழினத்தின் ஒரே ஆசை, ஆவல் எல்லாம்!**

இந்த நிலைமையை தோற்றுவிக்கும் பொறுப்பு தமிழ் மக்கள் கையில் தான் இருக்கிறது; எந்தக் காரணத்துக்காகவும் கூட்டணியை முறிக்க முயற்சிப்பவர்கள் தமிழினத்தின் எதிரிகளாகக் கணிக்கப்பட வேண்டும்!

ஒற்றுமையே நம்உடல் — தமிழ்ஈழ இலட்சியமே நம்உயிர் — இந்த உடலும் உயிரும் இணைந்தால் மட்டுமே "இயக்கம்" செயலுருப் பெறும்! உயிரும் உடலும் ஒன்றுக்கு ஒன்று ஆதாரமாக இயங்கினல் மட்டுமே உலக வாழ்க்கை; ஒற்றுமையும், இலட்சியமும் சேர்ந்தால் மட்டுமே தமிழனுக்கு விடுதலை! இதை மறவாது கடமையை செய்வோம்!

**உன் அன்பு தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# கூட்டணி - ஒரே அமைப்பு ஆகவேண்டும்!

ஒரு தேசம் தன்னுடைய புனிதமான தேசிய விடுதலைப் போரில் குதித்து அதிலே வெற்றியீட்டி சுதந்திர நாடாக பரிணமிக்கவேண்டுமானல் அதற்கு மூன்று முக்கிய அடிப்படை அம்சங்கள் இருக்கவேண்டும்.

முதலாவது — அந்தத்தேசத்தில் வாழும் மக்கள்தாம் சுதந்திரமாக யாருக்கும் அடிமையின்றி தன்மானத்துடன் வாழுவது என்று சங்கற்பம் ஏற்கவேண்டும். சுதந்திர உணர்வு அடித்தளத்து சமானிய மக்களிடையே வீறு பெற்றெழவேண்டும்; அடிமையாக வாழ்வது அவமானம் என்ற உணர்வு பொங்கவேண்டும்; சுதந்திரத்துக்காக எதையும் இழக்கவும், எத்தகைய தியாகத்துக்கும் தயாரான மனப்பக்குவ நிலையை மக்கள்பெறவேண்டும். அந்த நாட்டில் வாழும் முதியவர்கள், இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் அனைவரது உள்ளங்களிலிருந்தும் இந்தத்தேசிய விடுதலை வேட்கை பொங்கி எழவேண்டும்.

இரண்டாவது — சுதந்திர வீறு பெற்றெழுந்துள்ள மக்களை விடுதலையை நோக்கி வழி நடத்திச்செல்லுவதற்கு கட்டுக்கோப்புள்ள, இறுக்கமான, பலம்வாய்ந்த ஓரே அமைப்பு – இயக்கம்—வேண்டும்!

மூன்ருவது — இந்த இயக்கத்தை வழி நடத்திச் செல்லுவதற்கு மக்களின் பரிபூரண நம்பிக்கையைப் பெற்ற, தியாகத்தில் தோய்ந்த, தூய்மை நிறைந்த, அந்தரங்க சுத்தியுடைய சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவர்களான தலைவர்கள் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மூன்று அம்சங்களும் சரியாக அமைந்துவிட்டால், ஒருநாடு நீண்ட காலத்துக்கு அந்நியனுக்கு அடிமைப்பட்டுக்கிடக்காது. மிகவிரைவில் சுதந்திரத்தை பெறுவதை யாராலும் தடுத்திட முடியாது!

இன்று சிங்கள ஏகாதிபத்தியத்தின்கீழ் அடிமைப் பட்டுக்கிடக்கும் தமிழ்ஈழத்தில் இந்த மூன்று அம்சங்களும் இருக்கின்றனவா என்று பார்ப்போம்!

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இன்று சுதந்திர உணர்ச்சி கரைபுரண்டோடுகிறது. தமிழ்ஈழத்தை மீள்வித்து அதை ஒரு சுதந்திர நாடாக்கவேண்டும் என்ற சுதந்திரதாகம் மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றி வளர்ந்துவிட்டிருக்கிறது. தமிழ் இளைஞர்கள் நாட்டு விடுதலைக்காக எதையும் செய்யச் சித்தமாக இருக்கிருர்கள். சுருக்கமாக கூறினல்—சுதந்திரத் தமிழ்ஈழம் என்ற இலட்சியத்தை ஏற்காதவர்களுக்கு தமிழ்ஈழ நாட்டின் அரசியல் வாழ்வில் இனி இடமேயில்லையென்ற அளவுக்கு விடுதலை வேட்கை வளர்ந்துவிட்டிருக்கிறது.

தமிழ் மக்களை விடுதலைப்பாதையில் வழிநடத்திச் செல்வதற்கு அந்தரங்க சுத்தியும், சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட நேர்மையும், தியாகசீலமும் உண்மையும் உறுதியுமிக்க தலைவர்கள் இருக்கிருர்கள்!

சென்ற ஆண்டு மே திங்கள் 14ம் நாள் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் கட்சிகளின் கூட்டமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் தமிழினத்தின் ஒரேயொரு இலட்சியம்— இறுதி இலட்சியம் என்ன என்பது துலாம்பரமாக தீர்மானவடிவில் ஒரேமனதாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

**“இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் நிலையான வாழ்வை பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுதந்திர இறைமையுள்ள மதசார்பற்ற சோசலிச தமிழ்ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது”** என்பதே வட்டுக்கோட்டை மாநாட்டின் முடிந்தமுடிவு — இறுதியான ஒரே தீர்மானம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்துள்ள தமிழ் ஈழத்தைச் சேர்ந்த அனைத்துக்கட்சிகளின் ஏகோபித்த இலட்சியம் சுதந்திர இறைமையுள்ள மத சார்பற்ற சோசலிச தமிழ்ஈழ அரசை அமைப்பதுதான் என்பது இந்த மாநாட்டுத் தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது!

இவ்வாறு கூட்டணியில் இணைந்துள்ள தமிழ் ஈழத்திலுள்ள கட்சிகள், தமக்கென ஓர் பொதுவான குறிக்கோளையும், பொதுவான கொடியையும், பொதுவான தலைமையையும் அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட பின்னர், தொடர்ந்து தனித்தனிக் கட்சிகளாக செயற்படவேண்டிய அவசியம் என்ன? தமிழர் விடுதலைக்கூட்டணி, பல அரசியல் கட்சிகளின் ஓர் கூட்டமைப்பு என்கிற இன்றைய நிலையை மாற்றி, அதை ஒரே தலைமை கொண்ட, காத்திரமான ஒரே அமைப்பாக மாற்றியமைப்பதன்மூலமே அதை மேலும் இறுக்கமடைய செய்யமுடியும் என்று தமிழ் மக்கள் மத்தியிலே ஓர் அபிப்பிராயம் நிலவிவருவதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது நமது கடமையாகும்.

ஒரேகொடி, ஒரே கொள்கை, ஒரே தலைமை என்பதுடன் ஒரே அமைப்பாகவும் இன்றைய கூட்டணி விரைவில் அரசியல் பரிணும வளர்ச்சிபெறவேண்டும்; அதுவே அமைப்புரீதியாக இயக்கம் பலமடைவதற்கு ஒரே வழியாகும்.

# தமிழ் பேசும் தாதிமார்கள் அவமதிக்கப்பட்டனர்!

அண்மையில் சிறிலங்கா பொது ஹெத் சேவா சங்கமயவின் ஆண்டுக்கூட்டம் இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றபோது தமிழ்பேசும் உறுப்பினர்களை அவமதிக்கும் விதத்தில் ஓரிரு சம்பவங்கள் நடைபெற்றமை திரைமறைவில் இன ஒதுக்கல் நடைபெறுவதை வெளிப்படுத்துவதாக உள்ளது.

மேற்படி மகாநாட்டில் பெருந்தொகையான தமிழ் உறுப்பினர்கள் கலந்துகொண்ட போதிலும் அங்கு வழங்கப்பெற்ற அறிக்கைகள் யாவும் தனிச் சிங்களத்திலேயே அச்சிட்டு விநியோகிக்கப்பட்டதாம். இச் சம்பவம் குறித்து அதிருப்தியடைந்த உறுப்பினர்கள் அதனை மேடையில் வைத்துப் பகிரங்கமாக வெளிப்படுத்தித் தமது துணிவையும், தமிழ் உணர்வையும் உரிமையுடன் வெளிக்காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து சிங்கள நிர்வாக உத்தியோகஸ்தர்களில் ஒருசிலர் கவலை தெரிவித்தபோதும் மகாநாட்டுக்கு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த ஒருவர் ‘தமிழர்கள் வேண்டுமானல் தங்களுக்கென ஒரு சங்கத்தை அமைத்துக் கொள்ளட்டும்’ என இன வெறி கலந்த எண்ணத்துடன் கூறியதாக அறியப்படுகின்றது.

இந்த விருந்தினரின் அபிப்பிராயம் அவரின் அடிமனதில் படிந்துள்ள இன ஒதுக்கலையும், சாதிபேதத்தையும் மிகத் தெளிவாகப் பிரதிபலிப்பதை நாம் நம்பலாம்.

தாதிகள் சேவை சங்கத்தில் தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தபோதும் இந்தச் சாதிவெறி ஏவல் நாய்கள் குறித்து தமிழ்பேசும் உறுப்பினர்கள் ஜாக்கிரதையாக இருத்தல் மிக அவசியமாகும்.

இச்சம்பவங்கள் தொடர்பாக தென்னிலங்கை உறுப்பினர்கள் அகில இலங்கை ரீதியில் மொழிவழித் தொழிற் சங்கம் ஒன்றினை உருவாக்கத் திட்டமிட்டிருப்பதாக அறிகின்றேன்.

திட்டங்கள் சிறந்ததாக இருப்பினும் எதற்கும் அவசரப்படாமலும், உணர்ச்சி வசப்படாமலும் பிரச்சினைகளையும், அவற்றின் பெறுபேறுகளையும் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு அலசி ஆராய்ந்து குறைநிறைகளைச் சீர்தூக்கிச் செயல்படும்வண்ணம் வேண்டிக் கொள்கிறேன்.

நமது உரிமைகள், நமது இலட்சியம், நமது போராட்டம் இவையாவும் நமது சமுதாய மீட்சிக்காகவே அமைந்தபோதிலும் எதிர்கால நலன்களைக் கருதி தீவிரப்படாமல் சாந்தமான அஹிம்சைப் பாதையிலே முன்னேறிச்செல்ல விரும்புவதே வெற்றிக்கு வித்தாகும்.

இச் சத்திய வேள்வியிலே தமிழ்பேசும் நலன்பேண் உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒரு கொடிநிழலில் சங்கமிப்பார்கள் என்பது உறுதி. ஏனெனில் நாளையப் பொழுது நமக்காகவே மலரப்போகின்றது.

—எம். எம். இக்பால்

அனைத்திலங்கையிலுமுள்ள தமிழ்த்தாதிமார்கள் இன்று (24.4.77) ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் கூடி தமக்கென தனியான மொழிவழித் தொழிற்சங்கம் ஒன்றை அமைக்கின்றனர். அதையொட்டி இக்கட்டுரை இங்கு இடம்பெறுகிறது,

# கூட்டணி ஒன்றினலேயே தமிழ் ஈழ நாடு மலரும்!

வயலிலே அறுவடை செய்வதற்காக நெல்விதைக்கிருேம். நெற்பயிர்களுடன் கோழிச்சூடன், நெற்சப்பி. கோரைமுதலிய புல்லுகளும் பூடுகளும் முளைத்துவிடுகின்றன. நெற்பயிர்களுடன் இளமையில் கோழிச்சூடன் நெற்சப்பி முதலியவற்றை வித்தியாசம் காண்பது கடினம். பருவத்தே குறைந்த செலவில் புல்கொல்லி நாசினிகளைப் பாவித்து அவற்றை ஒழிக்காவிடின் காலப்போக்கில் கூடிய செலவில் கைகளினல் அவற்றைப் பிடுங்கி எறிந்திடவேண்டும். அப்படியும் செய்யத்தவறின் நெற்பயிர்களுக்கிட்ட உரத்தை புல்லுகளும் சமித்து கொழுத்துவிடும். நெற்பயிர்கள் நல்ல விளைச்சலைக் கொடுத்திடாது.

இதேபோன்று பாராளுமன்றத் தேர்தல் என்றதும, தேர்தலுக்குத் தேர்தல் தோன்றும் விரக்திஅடைந்த சுயநல போலித் தலைவர்களும் அவர்கள் கையாட்களும் மக்களிடையே ஊடுருவல் செய்யத் துவங்கிவிட்டனர். மாசற்ற உத்தமர்கள், மக்களுக்கு அயராது உழைத்திடும் பொதுநலத்தியாகிகள் ஆகியோரைக்கொண்டு ஏற்படுத்தப்பட்ட தமிழர் ஒற்றுமை விடுதலைக் கூட்டணியைக் கலைத்திட இவர்கள் வழிவகுக்கின்றனர். மேற்கூறப்பட்ட கோழிச்சூடன், நெற்சப்பி போன்று, இவர்கள் யார் யார் என்பதை பொதுமக்கள் அறிந்து இவர்களைக் களைந்திடவேண்டும். அல்லாவிடின் இவர்கள் உபத்திரவம் என்றுமே நீங்காது.

தேர்தலுக்குத் தேர்தல் தோன்றும் தலைவர்கள் வெற்றிபெற தமிழர்களைப் பிராந்திய அடிப்படையிலோ, சாதி மத பேதத்திலோ பிரித்திடுவர். அடிப்படை உரிமைகளைப் பற்றி ஏதும் கூறிட மறுத்திடுவர் அல்லது தட்டிக் கழிப்பர். அற்ப வேலைகளைச்செய்துவிட்டு முட்டையிட்டபெட்டைக்கோழிபோல் கொக்கரிப்பர்.

உத்தமத் தலைவர்களோ தமிழ் மக்களின் ஒற்றுமையை என்றும் கருத்தினில் வைத்திடுவர். அற்ப சலுகைகளுக்கு அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுத்திடார். மந்திரி பதவிக்கு தன் மானத்தை விற்றிடார். சந்தர்ப்பவாதியாய் கட்சி விட்டுக் கட்சி பாயார்.

எமக்கென்று தமிழ் ஈழம் அமைத்திடுவோம். அங்கு தன்மானத்துடன் வாழ்ந்திட வழி வகுப்போம். சாதிப்பேயைப் புதைத்திடுவோம். பேரறிஞர் தந்தை செல்வா தமிழ் ஈழத்தின் வழிகாட்டி, அவர் தனை போற்றிடுவோம். அண்ணன் அமிர்தலிங்கம் அவர் வாரிசு என ஏற்றிடுவோம். ஒற்றுமைச் சின்னம் உதயசூரியன் கொடியை வணங்கிடுவோம்.

மன உறுதி ஓங்குக!
தமிழ் ஈழம் மலர்க!

—வடலியூர் சொக்கன்

## மூதறிஞர் செல்வா அவர்களை வைத்திய பரிசோதனை செய்யவந்த டாக்டர் ராமமூர்த்தியின் பட்டங்கள்

பத்மபூஷண்
பிரிகேடியர்
Master of Surgery
F. R. C. S.
(E) F. I. C. S.
F. A. C. S.
F. A. M. S.
F. A. S. C.
Honourory Surgeon to President of India
,, ,, ,, Armed Forces
Neuro Surgeon—General Hospital, Madras
Head of Dept., Institute of Neurology
Professor of Neuro–Surgery; Madras Medical College
Principal—Madras Medical College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக்கூட்டணி மேதின ஊர்வலம்

## பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்வு!

'மே தினவிழாவை தமிழ் தொழிற்சங்கக் கூட்டணித் தலைவர் திரு. சே. மா. செல்லத்தம்பு பா. உ. அவர்கள் தலைமையின் கீழ் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடத்துவதென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியும் இணைந்து இப்பொறுப்பினை ஏற்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே அமைக்கப்பட்ட மேதினவிழா அமைப்புக்குழு இவ் ஏற்பாட்டினை செய்யும்.

தமிழ் மக்களை தனித் தேசிய இனமாக அங்கீகரித்து அவர்களுக்கு சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் ஈழத்தை மீட்டுக்கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக்கிளை ஏற்றுக்கொண்ட காரணத்தினால் வடபிரதேசக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைச் செயலாளர் அ. வைத்திலிங்கம் அவர்கள் எழுதிய கடிதத்தின் பிரகாரம், அவர்களையும் இம் மேதினவிழாவில் சேர்த்து நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இம்முடிவு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் தமிழ் தொழிற்சங்கக் கூட்டணித் தலைவர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்களும் தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் நாயகம் ஐ. தி. சம்பந்தன் அவர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.



பட்டிருப்புத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களில் ஒருவரும் கிழக்கிலங்கையின் பிரபல கவிஞருமான தேனூரான் அவர்களின் புதல்வன் பிரபாகரனின் பிறந்தநாள் விழா 8-4-77 அன்று கழுதாவளையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

### ஏழாவது ஆண்—

—1-ம் பக்கத் தொடர்

அஞ்சிஅரசு குப்பைத்தொட்டிக்குள் போட்டுவிட்டது.

இதையடுத்து, அண்மையில் நடைபெற்ற தமிழர் கூட்டணியும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது தெரிந்ததே. இந்தப் பேச்சுவார்த்தையின் போது தரப்படுத்தலை அகற்றுவதாக அரசாங்கம் தானகவே வலியவந்து அறிவித்தது. அதன் பெறுபேருக இப்போது தரப்படுத்தலை நீக்கிவிட்டதாக அரசு அறிவித்திருக்கிறது.

"ஏழு ஆண்டுகளாக தரப்படுத்தலை அமுல் படுத்தி விட்டு, ஆட்சியின் முடிவில் தரப்படுத்தலை கைவிட்டதாக கூறுவதால் தமிழினத்துக்கு பயன் என்ன இருக்கப்போகிறது?

தரப்படுத்தலை நீக்கி திறமையடிப்படையை மீண்டும் அமுலுக்கு கொண்டு வருவதென்றாலும், அது பொதுத்தேர்தலின் பின்பு தான் இனி நடைபெறவேண்டும். அப்போது எந்த ஆட்சி பதவியில் இருக்கப்போகிறதோ —அந்த ஆட்சிஎந்தக் கொள்கையை பல்கலைக் கழக அனுமதியில் பின்பற்றப்போகிறதோ என்று தமிழ் மாணவர்கள் அங்கலாய்க்கிருர்கள்.

# வாழ்விக்க வாடா!

"மணிக்கவிராயர்"

வீரனே வா! வெஞ்சிறைச் சாலை கண்டு
அஞ்சுதல் அடையா நெஞ்சே!
தீரனே வா! தயங்கிடாதே! தயக்கமெல்லாம்
கோழைகள் சொத்து! இன்னல் கண்டு
சோர்ந்திடா(த) இளைஞர் ஏறே! துடித்து வா!
சரித்திரத்தின் நாயகா!
புறங்காட்டி ஓடும்பேடிக் கும்பலை வேரறுக்க
அறம்பாடி வாடா, புலவா! வா!
திறமுண்டு ஆற்றலுண்டு தியாகத்தின்
தழும்புண்டு நாவுண்டு நாடு கண்டு
நடுங்குமுன் பேனு உண்டு
அரம்போலும் பகைவர் கூட்டம் — உந்தன்
அனல் வீசும் திக்கண் கண்டு
சுருண்டோடும் நிலைமை யுண்டு
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசா(த)
உள்ளத்தின் உறுதி யுண்டு
கள்ளத்தைக் கண்டு கவிபாடிக்கொல்லும்
களவீரம் மெத்த வுண்டு.
சொல்லுண்டு சொல்லைச் செயலாக்கும்
ஆண்மை மிகவுண்டு உண்டு
கல்லையும் கனியச் செய்திடும் இன்சொல்
வன்மையும் மிக்க வுண்டு
போராட்டப் புலியான கலைஞரின் போர்க்குணம்
புயல் வேகம் உன்னில் உண்டு
மாருட்டம்செய்வோர்கள் இடியாட்டம் பதில்கண்டு
காராட்டம் கலைந்தோட லுண்டு
தேனூட்டம் தமிழை மழையாட்டம் பெய்து
திக்கெட்டும் புகழ் கொண்ட துண்டு
தலைமைக்கு ஏற்ற தகுதிகள் யாவும்
தடயங்கள் ஆக வுண்டு பத்துத்
தலைகொண்ட(இ)ராவணன் நிலைகொண்ட
மண்ணிதன்
வரலாற்றுக் கண்ணுண்டு உண்டு!
விலையாகிப் போகாத கொள்கை மா மலையே!
தந்தை சொல் கட்டுண்ட தலைவா!
கறைபூச எண்ணிடும் துன்மார்க்க நெஞ்சினர்
பழிபோட முயன்றிடும் படுமோசக் காரர்கள்
குறை கூறி நிற்பது கண்டும்—
குற்றங்கள் கூறிடக் கேட்டும்—
'பதவியே பெரிதல்ல' பைந்தமிழ்த் தாயவள்
விதி வெல்லல் பெரிதென்று சொன்னுய்!
'விதி வெல்ல—நடைபோடும்
வேகத்தையுடையோர்கள்
விடுதலை வீரர்களாவார்; இதை
உணராதோர் தலைவர்கள் ஆகார்!
விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கொள்கை
வெற்றிக்காய் உழைத்திட வேண்டும்!
பிடிக்காத 'கனவான்கள்' பேசாமல் ஒதுங்கட்டும்
பாசறை நடத்துவோர் வந்திடட்டும்!
என்றுயே — இதிலென்ன தப்பு?
உண்மைகள் உண்மையில் வேம்பாகும் ஆமாம்!
அதற்காக விட்டிடலாமா?
'தமிழீழம்' பெற உந்தன் தலைமையும் தேவை
தருக்கரைத் தடுத்தாள உன் சேவை தேவை
தடையென்ன? நடை போட வாடா!
படைகண்ட புலவா! நீ கண்ட
கனவதை நனவாக்க வாடா;
விடைகாணத் துடிக்கின்ற நாட்டின்
விறல்மிக்க படையுண்டு இங்கே
துணை நிற்க உன்னேடு என்றும்!
கொடி நாட்டி கொற்றத்தைத் தேடி
தமிழுத் தாயை வாழ்விக்க வாடா!

### திமுகழகப்...

—1-ம் பக்கத் தொடர்

கட்சியின் பொதுச்செயலாளர் என்ற முறையில் ஜனநாயக மரபுப்படி, அதற்கான தார்மீகப் பொறுப்பை நானே ஏற்றுக்கொண்டு, பொதுச்செயலாளர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக அண்மையில் அறிவித்திருந்தேன். கடந்தகாலங்களில் கட்சியின் வெற்றிக்கு தலைமைப்பீடம் உரிமை கொண்டாடியது போல தோல்விக்கும் பொறுப்பை ஏற்பது நியாயமானதே.

கருணநிதியும், நானும் இரு வேறுபட்ட காரணங்களுக்காகவே பதவிகளை ராஜினமா செய்வது என்ற முடிவுக்கு வந்தோம். இவை பற்றி ஆராயக்கூடிய தி.மு.க. மத்திய செயற்குழு, இருவரது ராஜினமாக்களின் காரணங்களை ஆராயாமலேயே அவற்றை வாபஸ் பெறும்படி இருவரையும் வற்புறுத்தியது. அதனல் நான் எனது ராஜினமாவை வாபஸ் வாங்கிக்கொண்டேன்.

இது விஷயமாக புதிய பூசல்கள் எதுவும் தோன்ருது என்ற நம்பிக்கையுடன் நாம் இருவரும் கழக வேலைகளை கவனிக்க ஆரம்பித்தோம். ஆனல் ஜனநாயக மரபுப்படி கட்சித்தலைவர்கள் பதவி விலகவேண்டுமென்று நான் விடுத்த அறிக்கைக்காக என்னைக்கண்டித்து எனக்குக் கடிதங்கள் எழுதுமாறு கட்சி உறுப்பினர்கள் சிலர் தூண்டிவிடப் பட்டனர். நான் பகிரங்கமாக வெளியிட்ட இந்தக் கருத்து, கருணநிதியின் கருத்துக்கு முரண்பட்டதாகஇருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

இந்தச் சூழ்நிலையைத் தொடர்ந்து மற்றவர்களுக்குத் தொல்லைகளின்றி நான் விலகிச் செல்ல முடிவு செய்துள்ளேன். அதன்படி பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும்,சாதாரண கழக உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகிக்கொள்ளுகிறேன். தனிமையான ஓர் இடத்தில் மன அமைதிக்காக சில நாட்கள் ஓய்வு எடுக்க விரும்புகிறேன்.

இன்னும் சில நாட்களில் எனது ஏனைய சகாக்களுடன் ஆலோசனை நடத்திய பின்னர், அண்ணுவின் கொள்கைகளை பாதுகாக்கும்நோக்குடன்புதியகட்சியொன்றை உருவாக்குவதுபற்றி அறிவிப்பேன். அண்ணுவின் அரசியல் தத்துவங்களையும், ஒழுக்கக் கோவைகளையும், பண்பாடுகளையும், [illegible] யான அரசியலையும் கொண்டதாகவும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உழைக்கும் அதே வேளையில் தமிழ் கலாசாரத்தை பாதுகாப்பதையும் புதிய கட்சி தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கும்!

"நான் எவர்மீதும் குற்றம் கூறவிரும்பவில்லை; என்னையே குற்றம் கூறுகிறேன்"

இவ்வாறுநெடுஞ்செழியன் பெயரில் ராஜராம் விடுத்த அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கை நெடுஞ்செழியனுடையதாக இருக்கமுடியாது என்று திரு. கருணநிதி மறுத்திருக்கிருர்.

### கருணநிதி அறிக்கை!

"திராவிடமுன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணு உருவாக்கிய கட்சி இந்தக் கட்சியை விட்டு யாரும் வெளியேறவேண்டாம்; உங்களுக்கு பிடிக்கவில்லையானல் நான் தலைமைப் பதவியிலிருந்து விலகுகிறேன். நீங்களே தலைமைப்பதவியை ஏற்று கழகத்தை நடத்துங்கள். நான் சாதாரண தொண்டனுக இருக்கிறேன். ஆனல் கழகத்தை விட்டு மட்டும் யாரும் பிரிந்து செல்லாதீர்கள்!''

மேற்கண்டவாறு கழகத்திலிருந்து வெளியேறியவர்களுக்கு கலைஞர் கருணநிதி உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். கழகப் பொருளாளர் அன்பழகன், சென்னை மாவட்ட செயலாளர் நீல நாராயணன், சாதிக் பாட்சா, கோவை எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆகியோர் இருபக்கங்களையும் சமரசம் செய்து கழகத்தை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கழகத்திலிருந்து தனி நபர்கள் பிரிந்து போனலும், கழகத்தின் எந்த ஒரு கிளையும் கழக அமைப்பிலிருந்து இதுவரை பிரியாமல் கட்டுக்கோப்புடன் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சென்னை மரீனு கடற்கரையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் திரு. கருணநிதி பேசுகையில் பின்வருமாறு கூறியிருக்கிருர்:—

'தேர்தலில் போட்டியிடுவதற்காகவும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவும் மட்டுமே தோன்றிய ஒரு இயக்கமல்ல திராவிட முன்னேற்றக்கழகம்! தமிழ் சமுதாயத்தின் இலட்சிய வெற்றிக்காக உழைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதே திராவிட முன்னேற்றக் கழகம்!

"கழகத்திற்குள் எத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டாலும், அது வாழும்; இன்னும் அதிக பலத்துடன் தனது யாத்திரையை தொடர்ந்து நடத்தும்!

தமிழின விரோதிகள் சிலர் —சதிகாரர்கள் சிலர்—தமிழ் மக்கள் மத்தியிலே பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிருர்கள். இத்தகைய சூழ்ச்சிகளையும் சதிகளையும், தமிழ் நாடும், தமிழ் மக்களும் பொறுத்துக் கொண்டு இருக்கமாட்டார்கள்.

"கழகத்திலிருந்து வெளியேறி புதியகட்சி அமைக்கப் புறப்பட்டிருப்பவர்கள், இறுதியாக எம். ஜி. ஆர். கட்சியுடன் இணையும் நோக்கத்துடனேயே இவ்வாறு செய்கிருர்கள். எம். ஜி. ஆர். கட்சியுடன் சேர்ந்தால், சட்டசபையில் சில இடங்களும், மந்திரி பதவிகளும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிருர்கள்!" இதே கூட்டத்தில் பேசிய பேராசிரியர் அன்பழகன் தி. மு. க. வின் நம்பிக்கைச் சொத்து நெடுஞ்செழியன் என்று வர்ணித்து அவரை கழகத்தில் மீண்டும் சேருமாறு அழைத்தார்.

"ஒலிவ் ஸ்நானப்பவுடர்"

எண்ணெய் முழுக்குக்கு ஒலிவ் ஸ்நானப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள். எங்கும் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் டாக்டர் ராமமூர்த்தி

**சுமார் ஆறரை அடி உயரம்; நடுத்தரவயது; கம்பீரமான தோற்றம்; கவர்ச்சியான நடை; கலகலப்பான பேச்சு; நுண்ணறிவை காட்டும் கூரிய மூக்கு; அடக்கம், அமைதி, எளிமை ஆகிய பெருமைப்பண்புகள்; ஆம், இவற்றுக்கு உரியவரே சென்னை மருத்துவ கல்லூரி நரம்பியல் சிகிச்சை நிலையத்தில் 18 ஆண்டு காலமாக பேராசிரியராகப் பணி புரிந்துவரும் டாக்டர் வி. ராமமூர்த்தி.**

உலகப் பிரசித்திபெற்ற இந்த வைத்திய மேதை, எவ்வளவு தூரம் உயர்ந்த நிலையில் வாழ்ந்தாலும், கர்வம் என்பது கிஞ்சிற்றும் இல்லாதவர்; எல்லோர்க்கும் இனியவர்; எல்லோருடனும் சகஜமாகப் பழகும் பண்பு நிறைந்தவர்.

பதவி வரும்போது பணிவும், துணிவும் வரவேண்டுமென்பார்கள்; டாக்டர் ராமமூர்த்தியிடம் இயல்பாகவே பணிவும், துணிவும் நிரம்ப உண்டு.

தமிழர்கள் சிலர் உயர்ந்த நிலையை அடைந்துவிட்டால் அவர்களது வாயிலிருந்து ஆங்கிலமே பொறிபறக்கும்; தமிழ் பேசவே அவர்களுக்கு 'நா'கூசும்; 'ஆங்கிலத்தில் பேசுதலே அறிஞர்க்கு அழகு' என்பது சிலரது சித்தாந்தம்; ஆனல் டாக்டர் பேராசிரியர் ராமமூர்த்தியோ உலகப்பிரசித்திபெற்ற ஒரு வைத்திய நிபுணராக இன்று ஜொலித்துக் கொண்டிருந்தாலும், தாம் ஒரு தமிழர் என்பதை என்றைக்கும் மறவாதவர்; தமிழர்களுடன் அழகான தமிழிலேயே அவர் பேசுகிறர்; நான் தொலைபேசியில் அவருடன் சென்னைக்கு தொடர்பு கொண்டு பேசியபோதுகூட, அங்கிருந்து தமிழிலேயே என்னுடன் பேசினர்.

ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை, அவரது நண்பர்கள் யார் என்று அறிந்தால் கூறிவிடலாம் என்பார்கள்; டாக்டர் ராமமூர்த்தியின் நெருங்கிய நண்பர் கலைஞர் கருணநிதி என்பதை அறியும் போதே—தமிழினப்பற்றும், மொழிப்பற்றும் நிரம்பப் பெற்றவர் அவர் என்பது சொல்லாமலே விளங்கும்!

அதனல்தான் உலகின் ஏழு கோடி தமிழர்களின் பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு முன்பு (1961ல்) வைத்தியம் செய்த டாக்டர் ராமமூர்த்தி, இன்றைக்கு தமிழ் ஈழத்தின் தந்தை மூதறிஞர் செல்வாவுக்கும் சிகிச்சை அளிப்பதற்கு சிரமங்களைப் பார்க்காமல் சென்னையிலிருந்து பறந்தோடி வந்திருக்கிறர்!

'செல்வநாயகம் அவர்களைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அவர் இங்கு தமிழர்களுக்காக நடத்திவரும் போராட்டங்களைப் பற்றியும் ஏடுகள் வாயிலாக அறிந்திருக்கிறேன்; அதனல்தான் கருணநிதி கூறியதும் வேறுவேலைகளை விட்டுவிட்டு இங்கு ஓடோடி வந்தேன்!' என்று கூறினர் டாக்டர் ராமமூர்த்தி. இதைக் கூறும்போது அவரது வார்த்தைகளில் தமிழின ஒருமைப்பாட்டு உணர்வு இழையோடியதைக் கவனித்தேன்!

சென்னையிலிருந்து புறப்பட்டு இரவெல்லாம் புகையிரதத்தில் பயணம் செய்து காலையில் திருச்சியை அடைந்து, அங்கிருந்து விமானத்தில் பறந்து வந்து பலாலியில் இறங்கிய டாக்டர் ராமமூர்த்தி, பிரயாண அலுப்பையும் பார்க்காமல் ஒரு சிறிதும் ஓய்வு எடுக்காமல் விமான நிலையத்திலிருந்து நேரடியாக யாழ் மருத்துவ மனைக்கு சென்று அங்கு இருமணி நேரத்துக்கு அதிகமாக தந்தை செல்வாவை பரிசீலனை செய்வதிலேயே ஈடுபட்டார். இது அவரது கடமையுணர்வுக்கு எடுத்துக்காட்டாகும்.

"மூதறிஞர் செல்வாவுக்கு சிகிச்சை அளிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்ததில் நான் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன்; இது எனது கடமை கூட!" என்றர். டாக்டர் ராமமூர்த்தி மகிழ்ச்சி பொங்க!

தி. மு. கழக ஆட்சியில், பேரறிஞர் அண்ணவும் கலைஞர் கருணநிதியும் பல இலட்ச ரூபா செலவில் சென்னையில் நிறுவிக் கொடுத்த உலகின் மிகச் சிறந்த நரம்பியல் சிகிச்சை நிலையத்தின் பேராசிரியராக பணியாற்றும் டாக்டர் ராமமூர்த்தி, தனிப்பட்ட முறையிலும் அரசாங்கத் துறையிலும் வைத்தியப் பணி புரிந்து வருகிறர்!

"அண்ணு ஆட்சிக்கு வந்ததும், 18 மாதங்களில் இந்த நரம்பியல் சிகிச்சை நிலயத்தை கட்டித்தருவேன் என்று வாக்குறுதி அளித்தார்; அதன்படி அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது; ஆனல் அண்ணுதான் ஆட்சிக்கு வந்து ஓர் ஆண்டுக்குள் மறைந்து விட்டார்; பின்னர் கருணநிதியின் தலைமையில் இந்திய ஜனதிபதியாக இருந்த திரு. வி. வி. கிரி இந்த நிலயத்தை திறந்து வைத்தார்; இச் சிகிச்சை நிலயத்தை நிறுவிய பெருமை அண்ணுவுக்கும் கருணநிதிக்குமே உரியது" என்று நன்றியுணர்ச்சிபொங்கக்கூறினர் ராமமூர்த்தி!

இதனல்தான், தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சி 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டு, கவர்னர் ஆட்சி புகுத்தப்பட்ட பின்னர், அண்ணு, கருணநிதியின் படங்கள் அரசாங்க அலுவலகங்களிலிருந்து அகற்றப்பட்டு, அங்கு இந்திராகாந்தியின் படங்கள் பலவந்தமாகத் திணிக்கப்பட்டபோது—இந்தப் பயமுறுத்தலுக்கு டாக்டர் ராமமூர்த்தி பயப்படவில்லை!

"அண்ணு, கருணநிதி இந்த இருவரது படங்களையும் நரம்பியல் சிகிச்சை நிலயத்திலிருந்து அகற்ற மாட்டேன்; அதற்காகஅவர்கள் என்னை என்ன செய்தாலும் சரிதான்" என்று ஒரேயடியாகக் கூறிவிட்டாராம் டாக்டர் ராமமூர்த்தி.

இத்தனைக்கும் டாக்டர் ராமமூர்த்தி அரசியலில் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரல்லர்; எல்லோருக்கும் — எல்லாக் கட்சியினருக்கும் பொதுவானவர்; ஆனல் நன்றி மறக்காதவர்.

எம். ஜி. ஆர்—எம். ஆர் ராதா துப்பாக்கிச் சூட்டின்போது (1967 பொதுத்தேர்தல் சமயத்தில்) இருவரிலும் பாய்ந்திருந்த குண்டுகளை அகற்றி இருவரையும் பிழைக்க வைத்தவர் டாக்டர் ராமமூர்த்திதான்!

கட்சி பேதமோ — சாதி பேதமோ— நிறபேதமோ இன்றி அனைவர்க்கும் சேவை செய்வதால்தானே டாக்டர்கள்சமுதாயத்தில்உயர்ந்தவர்களாகிறர்கள். அந்த உயர்ந்த பண்பிலிருந்து கொஞ்சமும் வழுவாதவர் டாக்டர் ராமமூர்த்தி.

கட்சி அரசியலில் ஈடுபாடு இல்லாவிட்டாலும், இந்திய நாட்டின் பொதுவான அரசியல் மாற்றங்கள் பற்றியும், தமிழக அரசியல் நிலவரம் பற்றியும் மிகவும் தெளிவான சிந்தனைகளை கொண்டிருக்கிறர் டாக்டர் ராமமூர்த்தி.

அரசியல் தெளிவுமட்டுமன்றி, தமிழ் இலக்கியம், சமயம் போன்ற துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருப்பவர் இந்த டாக்டர். அத்துடன் வடமொழியறிவும் நிரம்பியவர்.

"தமிழகத்தில் தமிழ் மறுமலர்ச்சியும், புத்தூக்கமும் பெறுவதற்கு காரணமாயமைந்தது திராவிட முன்னேற்றக் கழகமே" என்று தெரிவித்த பேராசிரியர், "தமிழ் நடை இன்னும் உணர்ச்சிமயமானதாகவே இருக்கிறது; அது நாளடைவில் இன்னும் அமைதி பெறவேண்டும்" என்று கருத்து வெளியிட்டார்,

'இலங்கையில் நீங்கள் பேசுகின்ற தமிழே சுத்தமான தமிழ்; அதனல் உங்கள் முன்னிலையில் தமிழ் பேசும்போது வெட்கமடைகிறேன்' என்றும் அவர் ஈழத்துத் தமிழுக்கு புகழ் மாலை சூடினர்.

தமிழ் ஈழத் தந்தை செல்வா அவர்களை பார்வையிட தமிழகத்துத் தலைநகரிலிருந்து பறந்துவந்த பேராசிரியர் டாக்டர் ராமமூர்த்தி தமது பண்பாலும், அன்பாலும் ஈழத்துத் தமிழர்களின் இதயங்களை கவர்ந்துவிட்டார்.

பேராசிரியர் ராமமூர்த்தி அவர்களுக்கு ஈழத்தமிழினம் என்றும் நன்றியும் கடமையும் பட்டுள்ளது.

—ஈழதாசன்

## தமிழ் ஈழம் மலர்ந்திடப் பாடும்!

— கவிஞர். காரை. செ. சுந்தரம்பிள்ளை —

வாருங்கள் எம்மிளந் தோழர்களே தமிழ்
வாழ வழிவகை செய்வோம் — எமை
ஆள வழிவகை செய்வோம் — ஒன்று
சேருங்கள் கூட்டணி காட்டிய பாதையில்
செல்வா தலைமையில் உய்வோம் — இதைச்
சிந்தை செய்யாவிடில் நைவோம்.

ஒப்பந்தம் செய்திட ஓடித்திரிந்து நாம்
ஊர்ப் பேச்சுக் கானது போதும்—வெறும்
வாய்ப் பேச்சுக்கள் இனிக் காணும் — எந்த
நிர்ப்பந்தம் நேரினும் நெஞ்சுத் துணிவுடன்
நின்றெதிர்ப்போம் அணிசேரும் — பகை
வென்றெதிர்ப்போம் பணி தாரும்.

சின்னத் தொழிலுக்கும் ஜே. பி. பட்டத்துக்கும்
செந்தமிழ் தன்னையே விற்று — ஒரு
சின்ன மொழியினைக் கற்று — எங்கள்
அன்னை தமிழை அழிக்க முயல்வோர்
அரச மரியாதை பெற்று — இனி
ஆட முடியாது; எற்று.

வடக்கிலோர் வேசமும் தெற்கிலோர் வேசமும்
வஞ்சகமாகவே ஆடி — தமிழ்
மாதாவை நன்ருகச் சாடி — எமை
அடக்க முயன்றிடும் ஆட்சியை நாம்இனி
ஆள விடோம் ஒன்று கூடி — இங்கு
வாழ விடோம்; தமிழ் பாடி.

குட்டக் குனிந்ததும் தட்டப்பணிந்ததும்
விட்டுக் கொடுத்ததும் போதும் — பகை
முட்டப் பொறுத்ததும் போதும் — நாங்கள்
எட்டி உதைத்திடும் காலம் நெருங்குது
எட்டப்பர் கூட்டமே கேளும் — தமிழ்
ஈழம் மலர்ந்திடப் பாடும்.

## என்று வரும் என் தமிழே அந்த நாள்

ப. இசை நவராசன்

ஆழிகொள் கழற்சங்கின் முத்தமேயென்
ஆவலின் வடிவேயம் மதிமுகமே
யாழிசை விருந்தேதென் கோகிலமே
யாவதும் என்னுளம் ஏனறியாய்
சூழிகை உண்கலம் இன்னிதமுன்
சொன்னமே கண்கயல் முல்லையிடை
காழிணை ஆர்குழல் மாதரசே
கண்மயி லேகனகச் சிலையே!

எழிலிய ஒள்நிறை தாமரையே
என்னுயி ரின்உயிர் நீதமிழே!
விழியிடைக் கருமணி யேபிணையே
வெம்களம் என்னுளம் உன்னையின்றேல்
மொழிஅலர்த் தேனமிழ் தேஉனையே
மும்மையும் பெற்றுயிர் உய்தருளால்
பழிச்சினேன் பொற்புடை சீரடிநின்
பாமலர் சூடினேன் பைந்தமிழே!

காசிலா காதலின் மெய்விளக்கும்
காலையின் பொற்கதிர் மாழையதும்
மாசிலா தென்குழ லோசையுடன்
மாலையின் செம்முகில் பூவரங்கம்

பார்சிலைக் காடுறை மைவரையும்
பாங்கதை யோக்கிடும் நன்மழையும்
தேசுறை செம்புனல் செங்கதிரும்
தென்றலும் நீயிலை யேல்கொடிதே!

ஈர்இலா சுரன்உறை நீர் இணையோய்
எல்இலா நள்ளினில் வாள்தகையோய்
ஆர்இலா வைகலும் பல் அணங்கும்
அருளிலார் கடும்பிணி களை இய நீ
பாரிலே தேமருந் தாயமைவாய்
பல்கலைக் கண்உன தேதிருவே
நேர்இலா முத்தமி ழாய்த்திகழ்வோய்
நின்அடி நீவிடும் என்னுதலே!

கோமள மேதமிழ் ஆரமுதே
கொற்றவி என்மன தின்உனையே
தாமதம் நீக்குக என்றழைக்கும்
தங்கமே என்கரம் ஏந்துகைபார்
தேமலர்க் கோவையுன் கைதழுவி
தெய்விக இன்பம தால்உறவே
நாமுயிர் ஒன்றிடும் நாளதுவும்
நண்ணுதல் என்றென சொல்கிளியே!

வெளிவந்துவிட்டது

இன்றே வாங்கி பாவியுங்கள்சிவா இண்டஸ்ட்ரிஸின் மற்றும் பல தயாரிப்புகளான:-

றேயல் ஜெலி கிறிஸ்டல்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் பேக்கிங் பவுடர்
றேயல் கோன் பிளவர்
றேயல் நீலம்

தயாரிப்பாளர்கள் விநியோகஸ்தர்கள்

சிவா இண்டஸ்ட்ரிஸ்

112 - 1/3 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தின் விடுதலை முழக்கம்

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து உண்டுகளித்திருப்போருக்கு நிந்தனை செய்யக்கூடிய நிலைக்கு உயர்ந்திருக்கக்கூடிய சோவியத் சோசலிஸ்ட் ரஷ்யா, செஞ்சீனு, வட கொரியா, கியுபா, வியட்நாம், கிழக்கு ஜெர்மனி, றூமேனியா, யூகோஸ்லாவியா போன்ற சோசலிச நாடுகள் யாவும் தொழிலாளர் தினமான மே முதல் நாளைச் சர்வ தேச தொழிலாளர் தினமாகவும், தேசிய எழுச்சி நாளாகவும் கொண்டாடி வருவது தெரிந்ததே!**

முதலாளித்துவ நாடென வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் சிக்காக்கோ, நகரத்துத் தொழிலாளர் நடத்திய போராட்டத்தை நினைவு படுத்தவும், அவர்கள் சிந்திய இரத்தத்தின் அடையாளமாக செங்கொடிகளை அணிவகுப்புக்களில் பயன்படுத்தவும் உலகத் தொழிலாளருக்கு வாய்ப்பளிப்பது மே தினம். ஆகவே தான் ஒன்றுபட்டு உலகத் தொழிலாளர், விவசாயிகள் அந்நாளைச் சிறப்பாக அனுட்டிக்கிறுர்கள்.

எனவே, மொழிவழித் தொழிற் சங்கங்கள் முகையவிழ்த்த நாளில் இருந்து தமிழ் ஈழமும் மே நாளை முக்கியமான ஒரு தினமாக அனுட்டித்து வருகின்றது. மேற் கூறப்பட்ட சோசலிச நாடுகளில் மே நாள் அணிவகுப்புக்களில் தொழிலாளர் விவசாயிகள், மாணவர்களது அணிவகுப்புக்கள் மட்டுமல்லாது இராணுவ அணிவகுப்புக்களும் இடம் பெறுவது தெரிந்ததே! காலாட்படை, கடற்படை, விமானப்படை அணிவகுப்புக்கள் சாகசங்களுக்கு மேலாக, சம்பந்தப்பட்ட நாடுகளது புதிய கண்டுபிடிப்புக்களும் எடுத்துச்சொல்லப்படுகின்றன. அப்படிச் செய்வதற்கான காரணம் சோசலிச பாதையில் சம்பந்தப்பட்ட நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு, முறியடிக்க முனையும் பகை நாடுகளுக்கு அவை சவாலாக அமையும் என்பதாலேயே!

தமிழ் ஈழத்தை மீள்வித்து ஆங்கு ஒரு சோசலிச அரசை நிறுவத் துடிக்கும் தமிழ்ப் பேசும் மக்களும் மே நாளை முன் சொன்ன சோசலிச நாடுகளது பாணியில் கொண்டாட வேண்டியது சிங்கள பௌத்த காலனி ஆட்சியில் இருந்து விடுவிப்பதற்கும், விடுதலையடைந்த தமிழ் ஈழத்தில் வர்க்க வேறுபாடு கடந்த சமத்துவ. சமரச சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதற்கும் எழுச்சி தருவதாக அமையும்,

எதிர்வரும் மேநாள் அணிவகுப்புக்கள் தமிழ்ஈழத்தின் எதிர்காலம் அதன் வரலாற்றில் பொற்காலமாக அமையுமென்பதற்குக் கட்டியங் கூறுவதாக அமையவேண்டும். தமிழ்ஈழம் இன்னமும் விடுதலைபெற்ற நாடுகளது வரிசையில் உலகப்படத்தில் பொறிக்கப்படாத காரணத்தால் தமிழ்ஈழ அரசின் இராணுவ அணிவகுப்புக்கள் எதிர்வரும் மேநாள் அணிவகுப்புக்களில் இடம்பெறு. உடையது விளம்பேல் என்பது முதுமொழி. ஈழ அரசு உதயமாகும்வரை படை அணிகளுக்கு தமிழ்ஈழ மே நாள் அணிவகுப்புக்களில் இடமிராது.

ஆகவே, தமிழ் ஈழத்தின் தொழிலாளர், விவசாயிகள், மாணவர் சகலரும் தமிழ் ஈழத்தில் மொழிவழித் தொழிற் சங்கங்கள் கூட்டாக நடத்தும் எதிர் வரும் மே நாள் அணிவகுப்புக்களிலும் மே தினப் பொதுக்கூட்டத்திலும் ஆயிரக்கணக்கில் பங்குபற்ற வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி; மகளிர் பேரவை, இளைஞர் பேரவைத் தலைவர்களுடன் அடி மட்டத் தொண்டர்கள் ஆதரவாளர்களும் எதிர் மே நாள் அணிவகுப்புக்களில் கலந்துகொள்ள ஏவுதல் பெறவேண்டும். பொது மக்களும் பார்வையாளர்களாக வன்றிப் பங்காளர்களாக அணி வகுப்புக்களில் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றனர். இயலாதவர்கள் குறைந்த பட்சம், அணிவகுப்பு கடந்து செல்லும் பாதைகளின் இரு மருங்கிலும் திரண்டுநின்று தம் ஆதரவையும் ஆசியையும் தமிழ் ஈழத்தைச் சமைக்க முனையும் தமிழ் ஈழத்தின் தொழிலாளர், விவசாயிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளலாம்.

தமிழ் ஈழத்தின் மே நாள் அணிவகுப்புக்களில் பல்வேறு தொழிற் சங்கங்களும் கலந்துகொள்ள விருப்பதால் கோஷிக்கப்படும். சுலோகங்களில் சுருதிபேதம் தலைகாட்டாதிருப்பதற்காகவும், தமிழ்ப் பேசும் தொழிலாளர், விவசாயிகளின் ஒருமைப்பாட்டை உணர்த்துவதற்காகவும் அணிவகுப்பில் கோஷிக்கப் படவேண்டிய சுலோகங்களையிட்டு முன்கூட்டியே ஆலோசனை கலந்துகொள்ளப் பட வேண்டியது அவசியம்.

தமிழ்ஈழத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற மே தின அணிவகுப்புக்கு தமிழ் ஈழத்தின் தேசபிதாவே தலைமைதாங்கிச் சென்றுர். தமிழ்ஈழத்தின் தொழிலாளரும், விவசாயிகளும், நாலாம் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது தமிழ் கேட்கவந்த விடத்தில் வீரசிங்கம் மண்டபத்தின்முன் படுகொலைக்கு ஆளான தமிழ்த்தியாகிகளைத் தாம் மறந்துவிடவில்லை என்பதற்கு அடையாளமாக ஒன்பதின்மர் நினைவுச்சின்னத்துக்கு மலர் தூவி மரியாதை செய்ததும் தெரிந்ததே!

இவ்வாண்டு நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருக்கும் தேசத் தந்தை மே நாளுக்கு முன் குணமடைய இறைவனின் அருளை வேண்டுவோம். விடுதலைபெற்ற சோசலிச தமிழ் ஈழத்தில் மூதறிஞர் செல்வாவுக்கே முதன்மை ஸ்தானம். ரஷியா, செஞ்சீனு, கியுபா, வியட்நாம் போன்ற சோசலிச நாடுகளது வரலாற்றில் லெனின், மாவோ, பிடால் காஸ்ரோ, ஹோசிமின் ஆகியோர் எப்படிப் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுப் போற்றிப் புகழப்படுகின்றனரோ அதற்கு ஒத்த விதமாக தமிழ்ஈழத்தின் தந்தை மூதறிஞர் செல்வாவும் விடுதலையடைந்த சோசலிச தமிழ்ஈழத்தின் வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறித்துப் போற்றப் படுவார்.

அமையப்போகும் தமிழ் ஈழம் எத்தகைய அரசை அமைக்கப்போகின்றது என்ற சந்தேகங்களுக்கு சற்றும் இடமில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தீர்மானங்களே அதற்கு விடை பகருகின்றது. அதற்குப் புற அடையாளமே தமிழ்ஈழத்தில் இடம்பெறவிருக்கும் எதிர்வரும் மே நாள் அணிவகுப்புக்கள். தமிழ்ஈழத்தின் தொழிலாளர், விவசாயிகளுடன் மாணவ, மாணவியரும் தமிழ் இளைஞர்களும், தமிழ் மாதரும் ஒன்றுபட்டு எழுச்சித் தோற்றம் தரும் காட்சியை தமிழ்ஈழம் சந்திக்கவிருக்கிறது எதிர்வரும் மே நாளில்!

—திரவியம்

## 'மே' திருநாளில் ஓங்கி ஒலிக்கட்டும்!

**சுதந்திரன்**
**(வாரம் இருமுறை)**
**சந்தா விபரம்**
ஓராண்டு — ரூபா. 50.00
அரையாண்டு — ,, 25.00
**சுடர்**
(கலை இலக்கிய திங்களிதழ்)
ஓராண்டு — ரூபா. 12.00
அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாகி சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

# தேசிய சுயநிர்ணய உரிமையும் தமிழீழக் கோரிக்கையும்

கலாநிதி இராஜ. இராஜசேந்திரன்

தேசிய சுயநிர்ணய உரிமை என்றுல் என்ன?

தேசிய சுயநிர்ணய உரிமையின் உண்மையான கருத்தை விளங்கிக் கொள்ளவேண்டுமானுல் சட்டரீதியான வரைவிலக்கணத்தை மாத்திரம் புரிந்து கொண்டால் போதாது. சரித்திர அரசியல் பொருளாதார விளக்கங்களையும் புரிந்துகொள்ளவேண்டும்.

மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்களின் "தேசிய சுயநிர்ணய உரிமை" பற்றிய வரைவிலக்கணத்தின் மூலம் காண்ட்டின் தத்துவத்திலிருந்து, குறிப்பாக அவருடைய "Fundamentel principles of metaphysic of morals" என்னும் நூலிருந்தே பெறப்பட்டது. காண்டினது விளக்கங்கள் பொதுவாகத் தனி மனிதனின் சுயநிர்ணய உரிமை பற்றியே கூறுகிறது. நாளடைவில் தனிமனிதனின் சுயநிர்ணய உரிமை" பற்றிய விளக்கங்கள் "தேசிய சுயநிர்ணய உரிமை" என்ற புதிய கோட்பாட்டிற்கு வழிவகுத்தது. ஒரு தேசம் அந்த தேசமக்களின் அபிலாசைகளின் அடிப்படையில் சுதந்திர அரசு ஒன்றை நிறுவுவதற்கு உரிமை உண்டென்பதை இக்கோட்பாடின் கூற்று.

19ம் நூற்ருண்டளவிலேயே பல்வேறு தேசங்களை உள்ளடக்கிய நாடுகளான "ஒட்டோமர் ஏகாதிபத்தியம்" றப்ஸ்போக் ஏகாதிபத்தியம்" "சாரிஸ்ட் ரசியா" ஆகியனவற்றை தேசியவாதிகளும் சோசலிஸ்டுகளும் கண்டித்து, இவ் ஏகாதிபத்தியங்களில் உள்ள ஒவ்வொரு தேசமும் சுதந்திரத்திற்காக போராடவேண்டும். என வலியுறுத்தினர். ஒரு தனி மனிதன் சுதந்திரம் பெற்று வாழவேண்டுமானுல் அவனுடைய தேசமும் சுதந்திரம் பெறவேண்டும் என வாதிட்டனர்.

1896ல் லண்டனில் கூடிய இரண்டாவது சர்வதேச காங்கிரஸ் என்னும் மார்க்சிஸ்டுகளின் மகாநாடு "தேசிய சுயநிர்ணய உரிமை" கருத்திற்கு மேலும் வலுவூட்டி தேசிய இனங்களின் சுதந்திரப்போராட்டங்களுக்கு ஆதரவுகொடுக்கத் தீர்மானத்தனர். லெனின், ஸ்டாலின் போன்ரோரும் பின்னர் இக் கருத்தை ஏற்றுக்கொண்டனர். சோசலிஸ்டுகள் மாத்திரமல்ல, மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்களும், ஏன் பிற்போக்கு வாதிகள் கூட இக் கருத்தை ஏற்றுக்கொண்டனர். ரசியாவின் சமூக சனநாயக உழைப்பாளர் கட்சி கூட உத்தியோகபூர்வமாக தேசங்களின் 'தேசிய சுய நிர்ணய உரிமை'யை 1903ம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது. 20ம் நூற்ருண்டின் தொடக்கத்திலிருந்து உலக ரீதியாக இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது.

ஐ. நா. வின் அடிப்படை பிரகடனத்தில் கூட 'சுயநிர்ணய உரிமை' பற்றி 1(2)லும் 55லும் கூறப்பட்டுள்ளது. மேலும் ஐ. நா. பொதுச் சபையின் காலனித்துவ நாடுகட்கு சுதந்திரம் வழங்கும் பிரகடனத்தில் தெளிவாக இதுபற்றி கூறப்பட்டுள்ளது. இப் பிரகடனம் "எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. இதன் அடிப்படையில் தங்கள் அரசியல் நிலையையும், பொருளாதார சமூக கலாச்சார கொள்கை நிர்ணயிக்கும் உரிமையும் அவர்கட்கு உண்டு" எனக் கூறுகிறது.

தேசிய சுயநிர்ணயஉரிமை என்று கூறும்போது சாம் ராஜ்யங்களிலிருந்து நாடுகள் விடுதலை பெறுவது மாத்திரம் என்று கருதக் கூடாது. இரண்டோ அன்றேல் இரண்டிற்கு மேற்பட்ட தேசங்களைக்கொண்ட ஒரு நாட்டிலிருந்து ஒரு தேசம் பிரிந்துபோவதும் "தேசிய சுயநிர்ணய உரிமையே. ரோபர்ட் ரன்டல் என்ற அரசியல் விஞ்ஞானி "தேசிய சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனம் தன்னை அடக்கியாளும் அரசிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தனக்கு சுயாட்சியையோ, சுதந்திரத்தையோ பெறுவதாகக் கொள்ளலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார். லெனினும் "தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பது தன்னை அடக்கியாளும் அரசிலிருந்து பிரிந்துபோய் சுதந்திர நாட்டை ஸ்தாபிப்பதே" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? தமிழ் ஈழ மக்கள் தமது அரசியல் அதிகாரத்தை உபயோகித்து சுதந்திரத் தமிழ் ஈழத்தைப்பெற விரும்புவது என்பது புதிதான விடயமொன்றில்லை. அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'தேசிய சுயநிர்ணய உரிமை'யின் அடிப்படையிலேயே எமது போராட்டம் அமைந்துள்ளது.

தமிழர்களின் "தேசிய சுயநிர்ணய உரிமை"யை மறுப்பவர்கள் அவர்கள் தமிழர்களாக இருந்தாலென்ன சிங்களவர்களாக இருந்தாலென்ன—அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைக்கோட்பாடுகளை அறிந்துகொள்ளாதவர்கள். சரித்திரத்தின் போக்கை, சட்டத்தின் நியதியைப் புரித்துகொள்ளாதவர்கள். காலனித்துவ ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஒப்பானவர்கள். இவர்கட்கு உண்மையைப் புரிய வைப்பது தமிழ் மக்களின் கடமை சுதந்திரத் தமிழ் ஈழத்தைப் பெறப்போராடுவது தமிழ் மக்களின் கடமை மாத்திரமன்று. அது எங்களின் மறுக்கவோண்ணு உரிமை கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# மேதின விழா கிழக்கிழத்தின் எழுச்சி விழா

மீண்பாடும் தேனுடாம் மட்டுமாநகரில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேதினவிழாவை கிழக்கிழத்தின் எழுச்சி விழாவாகக் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் பத்து ஆண்டுகளின் பின் மட்டுநகரில் இடம்பெறவிருக்கும் இவ்விழா பெருவிழாவாக ஒரு திருவிழாவாக அமையப்போகின்றது.

இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கவும் தேவையான சகல உதவி ஒத்துழைப்புக்கள் நல்கவும் இங்குள்ள ஏனைய மொழிவழித் தொழிற்சங்கங்களும்; தமிழர் விடுதலைக் கூட்டணி, இளைஞர் பேரவை முஸ்லிம் ஐக்கிய முன்னணி, மகளிர் பேரவை, மாணவர் இயக்கம் முதலான அமைப்புக்களும் முன்வந்துள்ளமை தித்திப்பான ஒரு செய்தியாகும்.

ஊர்வலம், கலைநிகழ்ச்சி, பொதுக்கூட்டம் முதலாம் அம்சங்களைக் கொண்டதாக விழா அமையவிருக்கின்றது.

நடைபெறவிருக்கும் எழுச்சி ஊர்வலத்தில் மாட்டு வண்டி ஊர்வலம். மோட்டார்வாகன ஊர்வலம், உழுவு இயந்திர ஊர்வலம், நடையணி ஆகிய அம்சங்களைக்கொண்டிருக்கும். உலகத்திலேயே முதன் முறையாக இடம் பெறப் போகும் தோணி ஊர்வலம் பார்வையாளர்களைக் கவரப் போகின்ற ஓர் சிறப்பு நிகழ்ச்சியாகும்

பாட்டாளிபுர மைதானத்தில் இடம்பெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் மொழிவழித்தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் கூட்டணிப் பிரமுகர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சொற்பெருக்காற்றவுள்ளனர்.

மட்டுநகரில் பிரபல்யம் வாய்ந்த கலைஞர்கள் பங்குகொள்ளும் இசை, நடன, நாடக, வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து முதலானவற்றைக்கொண்ட கலைவிருந்து பார்வையாளர்களின் உள்ளங்களைக்கொள்ளை கொள்ளுமென்பதில் சந்தேகமில்லை.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க மட்டுநகர்க் கிளையினர் எடுக்கும் இவ்விழா மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மொழிவழித் தொழிற் சங்கங்களினதும், தமிழர் விடுதலைக்கூட்டணி அமைப்புக்களினதும் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் வெற்றி விழாவாக அமையப் போவதோடு, கிழக்கிலங்கையில் ஒரு புதுயுகத்தினையும் தொடக்கி வைக்கத்தான் போகின்றது!

—தேனுட்டான்

"தமிழனின் சுதந்திரக் கோரிக்கையை எடுத்துரைக்க, இழந்த உரிமைகளை மீட்கத்தான் கடவுள் இன்று என்னை உங்களுடன் வாழவைத்திருக்கிறார். தமிழினம் கடந்த கால் நூற்றாண்டாகக் கடைப்பிடித்து வந்த பொறுமைக்கு எடுத்துக்காட்டாகத்தான நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்."

## செல்வாவின் சிந்தனைகள்

"25.00000 மக்கள் தலைவர்," "தமிழரசுத் தந்தை" போன்ற நூல்களை வெளியிட்ட குரும்பசிட்டி இரா. கனகரத்தினத்தின் மற்றுமோர் வெளியீடு தொடர்புகொள்க:

இரா. கனகரத்தினம், 49 கொழும்பு வீதி கண்டி

## மேதின விழா அமைப்பு குழுக்கூட்டம்

1-5-77ந் திகதி மட்டக்களப்பு பாட்டாளிபுரத்தில் நடைபெற இருக்கும்மேதின விழா சம்பந்தமான அதிமுக்கிய ஆலோசனைக் கூட்டம் 24-4-77ந் திகதி காலை 10-00 மணிக்கு மட்டக்களப்பு கச்சேரி வகுப்பறை மண்டபத்தில் நடைபெற உள்ளது. அரசாங்க எழுதுவினைஞர்சங்க மட்டு நகர்க் கிளையின் தலைவர் திரு. க. மகாலிங்கம் அவர்களின் தலைமையில் இக்கூட்டம் இடம்பெறும்.

செல்லமகால் 6-வது வாரம்

முத்துராமன், சுஜாதா, ஸ்ரீகாந்த், பத்மப்பிரியா, மனோரமா, ஜெயச்சந்திரன், எம். என். ராஜம்,

— நடித்த —

எஸ், எஸ். கே. பிலிம்ஸாரின்

வாழ்ந்து காட்டுகிறேன்

இப்பொழுது காட்சியளிக்கிறது

கெயிட்டி

சிவாஜி கணேசன், சௌகார் ஜானகி, வி. கே. ராமசாமி, உஷாநந்தினி, எம். ஆர். ஆர். வாசு

— நடித்த —

விஜயவேல் பிலிம்ஸாரின்

மனிதனும் தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் [மட்டுநகர்] 5-வது வாரம்

எம், ஜி. ஆர். ராதா சலுஜா -நடித்த

இதயக்கனி

கிங்ஸ்லி

குமுதம்

விரைவில்

திருவருள் (கலர்)

20-வது வாரம்

கெப்பிட்டல் - விஜயா (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, சந்திரகலா நடித்த

உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்டமன் கலர்)

வெலிங்டன் 6-வது வாரம் (யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா, பத்மப்பிரியா, சுருளிராஜன், மனோரமா, ஜெயச்சந்திரன் எம். என். ராஜம, பானுமதி நடித்த-

வாழ்ந்துகாட்டுகிறேன்

லிடோ (யாழ்நகர்)

ரவிச்சந்திரன், லதா நடித்த

சொர்க்கத்தில் திருமணம் (கலர்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12, [illegible] நாயகா வீதி, 194ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் ஏப்ரல் மாதம் 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org